சுருக்கம்

தொடக்கக் கல்வி – காவல் துறை குடியிருப்பு காஞ்சிபுரம் மாவட்டம், மேலகோட்டையூர், ஊனமாஞ்சேரி காவலர் குடியிருப்பு பகுதியில் புதிய உண்டு உறைவிட தொடக்கப்பள்ளி (Police Public School) 2018–2019 ஆம் கல்வியாண்டில் துவங்க அனுமதி மற்றும் பள்ளிக்கு 1 தலைமை ஆசிரியர் மற்றும் இடைநிலை ஆசிரியர்கள்/ பட்டதாரி ஆசிரியர்களை மாற்றுப்பணியில் அமர்த்த அனுமதி வழங்குதல் – ஆணை வெளியிடப்படுகிறது.

---

பள்ளிக்கல்வி(தொ.க.1(2)த்துறை

அரசாணை (நிலை) எண்.109

நாள்.31.05.2018
திருவள்ளுவர் ஆண்டு–2049
விளம்பி வருடம், வைகாசி –17,

படிக்கப்பட்டவை.–

1. அரசாணை நிலை எண்.944, உள்துறை (காவல் X) துறை, நாள். 27.12.2017
2. தமிழ்நாடு காவல் துறை தலைமை இயக்குநர் அவர்களின் கடிதம் R.C.No.1979/TNPBF (1)/2018, நாள்.17.05.2018. (தொடக்கக் கல்வி இயக்குநருக்கு முகவரியிட்டது)
3. தொடக்கக் கல்வி இயக்குநரின் கடிதம் ந.க.எண்.012084/கே4/ 2018, நாள் 22.5.2018.

-----

ஆணை :–

மேலே முதலாவதாகப் படிக்கப்பட்ட அரசாணையில் காஞ்சிபுரம் மாவட்டம், மேலகோட்டையூர், ஊனமாஞ்சேரி காவலர் குடியிருப்பு பகுதியில் காவல் துறை குடியிருப்பு பகுதியில் புதிய ஆங்கில வழி உண்டு உறைவிடப் பள்ளி (Police Public School) துவங்குவது குறித்து ஆணை வெளியிடப்பட்டுள்ளது.

2. மேலே மூன்றாவதாக படிக்கப்பட்ட தொடக்கக் கல்வி இயக்குநரின் கடிதத்தில், காஞ்சிபுரம் மாவட்டம், மேலகோட்டையூர், ஊனமாஞ்சேரி காவல் துறை குடியிருப்பு பகுதியில் புதிய ஆங்கில வழி உண்டு உறைவிடப் பள்ளி (Police Public School) துவங்கப்பட வேண்டும் என தமிழ்நாடு காவல் துறை தலைமை இயக்குநர் கோரியுள்ளார் என்றும், மேலும், அரசாணை (நிலை) எண்.944, Home [Police X] Dept., நாள் 27.12.2017 மற்றும் அரசாணை (நிலை) எண்.274, Home [Police X] Dept., நாள் 13.4.2018–ன்படி சங்கம் பதிவு செய்யப்பட்டுள்ளதாகவும் அதன் பின்னர் செயலாக்கக் கூட்டம் 09.05.2018 அன்று நடத்தப்பட்டது என்றும் இக்கூட்டத்தில் காஞ்சிபுரம் மாவட்டம், மேலக்கோட்டையூர், ஊனமாஞ்சேரி காவலர் குடியிருப்பு பகுதியில் தற்காலிகமாக மாநில பாடத்திட்டத்தின் கீழ் 2018–2019 ஆம் கல்வியாண்டில் 1 முதல் 5 ஆம் வகுப்புகளைக் கொண்ட இரு பாலருக்கான ஆங்கில வழியுடன் கூடிய புதிய உண்டு உறைவிடப்பள்ளி துவங்குவதற்கான அனுமதி பெறவும் இப்பள்ளிக்கு

ஆசிரியர்களை மாற்றுப் பணியில் அமர்த்திடவும் முடிவு எடுக்கப்பட்டுள்ளது என தெரிவித்துள்ளார் எனவும், புதிய தொடக்கப் பள்ளி தமிழ் வழியில் தொடங்கப்படவேண்டும் எனில், அப்பள்ளியில் 30 மாணவர்கள் சேர்க்கை இருக்க வேண்டும், 1 கி.மீ. சுற்றளவில் வேறு பள்ளிகள் செயல்படக் கூடாது, அவ்வூரில் 300 மக்கள் தொகை இருக்க வேண்டும் எனவும், உரிய கருத்துருக்கள் மாவட்டத் தொடக்கக் கல்வி அலுவலரால் பரிந்துரை செய்து அரசுக்கு அனுப்பி அனுமதி ஆணை பெறப்பட்டு வருகிறது எனவும், அனுமதி ஆணை பெறப்பட்டவுடன் பள்ளி செயல்படும் என்றும், அவ்வாறு செயல்படும் ஊராட்சி ஒன்றியத் தொடக்கப் பள்ளிகளில் மாணவர் சேர்க்கைகளின் அடிப்படையில் ஆங்கில வழிப் பிரிவு (English Medium Section) ஆரம்பிக்கப்பட்டு வந்துள்ளது எனவும், காவல் துறை குடியிருப்பு பகுதிகளில் மாநிலப் பாடத்திட்டத்தின் கீழ் ஆங்கில வழி (English Medium) உண்டு உறைவிடப்பள்ளி 2018–2019 ஆம் கல்வியாண்டில் 1 முதல் 5 ஆம் வகுப்பு வரை துவங்குவதற்கான அனுமதியும் இப்பள்ளிக்கு ஒரு தலைமை ஆசிரியர், மற்றும் 5 இடைநிலை ஆசிரியர்களை மாற்றுப் பணியில் அமர்த்த அனுமதி ஆணை வழங்குமாறும் தொடக்கக் கல்வி இயக்குநர் அரசைக் கேட்டுக் கொண்டுள்ளார்.

3. தொடக்கக் கல்வி இயக்குநரின் கருத்துருவினை அரசு நன்கு ஆய்வு செய்து, அதனை ஏற்கலாம் என முடிவு செய்து அவ்வாறே காஞ்சிபுரம் மாவட்டம், மேலக்கோட்டையூர், ஊனமாஞ்சேரி காவலர் குடியிருப்பு பகுதியில் தற்காலிகமாக மாநில பாடத்திட்டத்தின் கீழ் ஆங்கில வழி உண்டு உறைவிடப்பள்ளி 2018–2019 ஆம் கல்வியாண்டில் 1 முதல் 5 ஆம் வகுப்பு வரை துவங்குவதற்கு சிறப்பு நேர்வாகக் கருதி அனுமதி வழங்கியும், மேலும் ஆங்கிலவழிப் பள்ளி என்பதால் இப்பள்ளிக்கு ஒரு தலைமை ஆசிரியர், மற்றும் 5 இடைநிலை ஆசிரியர்கள் / பட்டதாரி ஆசிரியர்களை தேவையின் அடிப்படையில் மாற்றுப் பணியில் அமர்த்தவும், மேலும் இதனால் ஏற்படும் காலிப்பணியிடத்தை உபரி ஆசிரியர்களைக் கொண்டு சரிசெய்துகொள்ளவேண்டும் என்ற நிபந்தனை விதித்தும், அரசு ஆணையிடுகிறது.

(ஆளுநரின் ஆணைப்படி)

பிரதீப் யாதவ்,
அரசு முதன்மைச் செயலாளர்

பெறுநர்
தொடக்கக் கல்வி இயக்குநர், சென்னை – 6.
பள்ளிக் கல்வி இயக்குநர், சென்னை – 6.
காவல் துறை தலைமை இயக்குநர், சென்னை–4.
மாவட்டக் காவல் கண்காணிப்பாளர், காஞ்சிபுரம்.
முதன்மைக் கல்வி அலுவலர், காஞ்சிபுரம்.
மாநிலக் கணக்காயர், சென்னை – 18/35.
சம்பளக் கணக்கு அலுவலர் (கிழக்கு), சென்னை – 8.
சம்பளக் கணக்கு அலுவலர் (தெற்கு), சென்னை – 35.
மாவட்ட கருவூல அலுவலர், காஞ்சிபுரம் மாவட்டம்.

**நகல்**
மாண்புமிகு பள்ளிக்கல்வித் துறை அமைச்சர்
அவர்களின் சிறப்பு நேர்முக உதவியாளர், சென்னை – 9.

முதன்மைச் செயலாளர் அவர்களின் முதுநிலை முதன்மை தனிச் செயலாளர்,
பள்ளிக் கல்வித் துறை, சென்னை – 9
உள், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை, சென்னை – 9.
நிதித்துறை, சென்னை – 9
இருப்பு கோப்பு / உதிரி நகல்

//ஆணைப்படி அனுப்பப்படுகிறது//

பிரிவு அலுவலர்.